# ஆத்மஜோதி



ஸ்ரீ சிவானந்தா

# பொருளடக்கம்.


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | சிவானந்தர் தோத்திரம் | யோகி ஸ்ரீ சத்யார்க்கா | 321 |
| 2 | [illegible] ஐயர் | [illegible] | 322 |
| 3 | வேதாந்தமே வடிவாகிய சிவானந்தர் | [illegible] | 323 |
| 4 | [illegible] | | 329 |
| 5 | வாழ்க என்றும் வாழ்கவே | க. இ. | 332 |
| 6 | சிவானந்த ஜோதி | யோகி ஸ்ரீ சத்யார்க்கா | 333 |
| 7 | [illegible] தபோதனர் | ஸ்ரீமதி [illegible] | 337 |
| 8 | [illegible] | [illegible] | 340 |
| 9 | ஸ்ரீ சுவாமி சிவானந்தர் | [illegible] | 341 |
| 10 | சிவகுரு அணி மாலை | சிவபக்தியன் | 342 |
| 11 | சிவானந்தர் அர்ச்சனை மாலை | க. இ. | 343 |
| 12 | குருவந்தனம் | சாது ஸ்ரீ முருகதாஸ் | 345 |
| 13 | சிவானந்தர் மணி மொழி | | 346 |
| 14 | [illegible] | [illegible] | 348 |
| 15 | செய்தி திரட்டு | | 349 |
| 16 | ஸ்ரீ சிவானந்தர் அகில இந்திய யாத்திரை அட்டவணை | | 350 |
| 17 | சுவாமி ஸ்ரீசிவானந்தர், அவர்களின் [illegible] | | 351 |
| 18 | Sivananda | Sri G. Robinson, | (Cover 3rd page). |





# ஆத்ம ஜோதி

( ஆத்மீக மாத வெளியீடு )

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன். பதிப்பாசிரியர்: நா. முத்தையா.

சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75/- வருடச்சந்தா ரூ. 3/-

தனிப்பிரதி சதம் 30.

"ஆத்மஜோதி" நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)


ஓம்.


# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

| சோதி 2. | விகிர்தி ஸு புரட்டாசி மீ. | சுடர் 11. |
|---|---|---|


## சிவானந்தர் தோத்திரம்,

உலகெலாம் புகழும் உத்தம ஜோதி
'ஓம் சிவம் ஓம்சிவம்' என்றே
சலசலத் தோடும் சாங்கமாச் சோதி
தற்செருக் கிம்மியும் இன்றி
நிலவிடும் அன்பு நிறைந்தநற் சோதி
நிமலவே தாந்தமாச் சோதி
இலகிடும் வெள்ளி இமாலயச் சோதி
சிவானந்த சோதியை இசைப்போம்.

துங்கமாம் மூத்தி முடிமிசை துலங்கும்
துரியசி வானந்தர் வாழ்க!
மங்கல ஞான விளக்கென வளரும்
மாசிலாப் புண்ணியர் வாழ்க!
எங்குமே தெய்வத் திருவருட் பெருமை
யிலங்கிடுந் தொண்டர்கள் வாழ்க!
பொங்குயர் சத்து சமரஸ ரான
பூரணர் வாழிய மாதோ!

ஓம் சுத்த சக்தி!
ஓம் சிவ ஜோதி!

—யோகி ஸ்ரீ. சத்யார்க்கா.

# சேயைப்போல் தூயர்.

கீர்த்தனை.

நாட்டை] [ஆதி தாளம்

பல்லவி

நாடும் சிவானந்தம்! சுத்தானந்தம்!

அனுபல்லவி

தேடரிய சுகத்தை நாடியணைந்தே தன்னுள்
வீடுபெறும் வழியை வாடியுரைப்பவரை (நாடும்)

சரணம்

பத்தமடைபிறந்த சித்தந்துறந்த முத்தன்
சத்துவமே நிறை உத்தமனை
தத்துவமெனத்தன்னை நித்த முணர்வோனை
அத்துவிதப்பொருளைச் சித்தங்குவிந்திட
(நாடும்)

தங்கமே விளையுங் கங்கைபாயிமய
சிங்கமாய் வளரும் ஓங்காரனை
பங்கமின்றியவர் பாங்குடனே உம்மை
தீங்குறு வண்ணமே தாங்கியருள்செய
(நாடும்)

மெய்யா யன்பர்பலர் உய்யவேகருதித்
தூய தெய்வநெறிக் கழகமதால்
மாயை தீருமுபாயத் தன்னையே
சேயைப் போலேயவர் நேயமாயருளினார்.
(நாடும்)

—எஸ். குருஸ்வாமிஐயர்.



# வேதாந்தமே வடிவாகிய சிவானந்தர்.

——:-:——

(ஆசிரியர்)

பரந்து விரிந்த பல பெருங் கிளைகளையுடைய இந்து மதமாகிய உயர்ந்த கற்பக விருட்சத்தின் மூலவேர் வேதாந்தம். வேதாந்தங்களின் சிகரமாகவிளங்கும் உபநிடதங்கள் பாரததேசத்தின் பண்டைய மகரிஷிகள் தங்கள் சொந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளை அடக்கியுள்ளன. வியாச முனிவர் முதலில் சுருதியை நான்கு வேதங்களாய் வகுத்தனர். அடுத்தபடியாக உபநிடதங்களை உருவாக்கி, பின்னர் இவ்விரண்டின் விரிந்த பொருளை பிரம்ம சூத்திரமாய் அருளினர். கிருஷ்ண பரமாத்மாவிடம் அர்ச்சுனன் பெற்ற உபதேசமாகிய கீதையானது உபநிடதங்களுக்கும் பிரம்ம சூத்திரங்களுக்கும் மத்தியில் வேதாந்தத்திற்கு ஓர் பாஷ்யமாக மிளிர்கின்றது. இவை மூன்றும் இந்துமத சம்பிரதாயத்தில் பிரஸ்தான திரயங்களென அழைக்கப்படுகின்றன. இவற்றின் சாரமே வேதாந்தமென்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டுவந்துள்ளது.

இந்த உண்மையை அறியாமல் பலர் வேதாந்தம் என்றால் ஏனைய சமய சித்தாந்தங்களுக்கெல்லாம் புறம்பான ஒன்று என்றும், அது சங்கரர் விளக்கிய அத்துவித நெறியை மாத்திரம் குறிப்பதென்றும் கருதுகின்றனர். இது முழுத்தவறான கருத்தாகும். இன்று நாம் காணும் பல சமய சாஸ்திரங்கள் 'வேதாந்தம்' என்னும் பதம் ஆரம்பித்தகாலத்தில் இருந்தவைகளல்ல. இந்தியாவில் தற்போது வழக்கிலுள்ள வெவ்வேறு மதக் கொள்கைகள், வழிபாட்டு முறைகள், யோகசாதனைகள், சம்பிரதாயங்கள் சகலதும் வேதங்களின் ஞானபாதமான உபநிடதங்களின் சாரமாகிய வேதாந்தத்திலிருந்தே முளைத்தெழுந்தனவாகும். எனவே சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் காணபத்தியம் முதலாய எந்தச் சமயத்திற் பிறந்தவர்கட்கும் வேதாந்தம் பொதுவாகும்.

‘தேவர் குறளுந்திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்.”

என்னும் பழைய பாடலில் வேதாந்தம் 'திருநான்மறை முடிவு' எனக் குறிப்பிட்டிருப்பதை உற்று நோக்குக.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை"

என அப்பர் சுவாமிகள் பல்லவ மன்னனுக்குப் பதிலிறுத்த போது, அவர் உண்மையில் செய்தது

"யாக்கைச் சட்டையுள் அழிவறுமான்மா
தாக்கற்று நிற்குஞ் சாட்சியென்றறிவாய்
வாளுந் தீயும் வலிவுறத்தாக்கினும்
மாளாதிந்த மன்னுயிரான்மா" வெனும்

வேதாந்த கர்ஜனையேயாம். கவிக்குயில் சுப்பிரமணியபாரதியார் விளக்கிய அச்சமின்மையெனும் தத்துவம் சுத்தவேதாந்தமேயாம். காந்தியடிகளின் சுதந்திர இயக்கத் தொடர்பில் நாம் கண்டவீரம் தியாகம், தைரியம், பொறுமை, பெருமை அனைத்திற்கும்மூலசக்தி வேதாந்தமே.

சுருங்கக்கூறின், எல்லா இந்துக்களும் உண்மையில் வேதாந்திகளேயாவர். அவர்களின் வாழ்க்கையில் தொன்றுதொட்டு வேதாந்தம் ஊடுருவிநிற்கின்றது. இக்காரணங்கள்பற்றியே சுவாமிவிவேகானந்தர், 'எல்லாச்சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் தங்களை வேதாந்திகளென அழைக்க உரிமையுண்டு' எனக்கூறியுள்ளார். அம்மட்டோ! பின்னாளில் இந்தியாவிற் சரண்புகுந்தஅன்னியமதங்களும், பண்வெறிபிடித்துக் கப்பலேறிவந்திறங்கி அனர்த்தம்விளைத்த புறச்சமையங்களும் கூட, வேதாந்தத்தினின்று தப்பிக்கொள்ளமுடியவில்லையெனில் அதின்பெருமை சொல்லுந்தரத்ததோ? அது இந்திய மண்ணோடேயே கலந்திருப்பதால் அம்மண்ணில் வேரூன்றிய எதுவும் அதின் சாரத்தை உட்கொள்ளாமல் இருக்கமுடியாது. இஸ்லாமின் கிளையாகிய சூபி மத சித்தாந்தம் இந்தமுறையிற்றோன்றிய ஒன்றே.



நவீன விஞ்ஞான விற்பன்னர்கள் கண்டுபிடித்துள்ள பெரிய உண்மைகளோடு முரண்படாத சமய தத்துவம் ஒன்று உண்டெனில், அது பாரத நாட்டின் புகழுக்குக் காரணமான வேதாந்தமே. "சத்தியமே வெல்லும், சத்தியத்தை அத்திவாரமாகக் கொண்ட பாதையே கடவுளிடம் சேர்க்கும்" இதுவே வேதாந்த லட்சியம். ஒரு அற்ப சிறுவிதையில் பெரிய ஆலமரத்தின் முழு வளர்ச்சியும் அடங்கி நிற்பதைப்போலவே; இவ்வுலகம் முழுவதும் சத்தியப் பொருளான கடவுளினின்று தோன்றிப் பரிணமித்தது என்பதே அதின் கொள்கை. டார்வின் கண்டுபிடித்த 'எவலூஷன்' என்னும் பரிணாமக்கொள்கை இதற்கு உடன்பாடானதே. இன்னோரன்ன காரணங்கள்பற்றியே நவீன விஞ்ஞான உலகின் கவனம் இன்று வேதாந்த மார்க்கத்தில் பதிந்துள்ளது. ஹக்ஸ்லி, ஐன்ஸ்டீன் போன்ற மேதாவிகள் வேதாந்த நுட்பங்களை ஆராய்ந்து வருவது உலகறிந்த விஷயம்.

ஒரு அடைமொழியுமின்றி 'கோயில்' என்றதும் அது சிதம்பரத்தைக் குறிப்பதை யாவரும் அறிவர். சிவனுக்குப்போல் சிதம்பரத்திற்கும் உள்ள தனிச்சிறப்பு இது. இதைப்போலவே அம்மையார் என்றதும் காரைக்காலம்மையாரையும், 'நாவலர்' என்றதும் நல்லூர்ஆறுமுக நாவலரையும், 'வள்ளலார்' என்றதும் இராமலிங்கசுவாமிகளையும் கருதுகின்றோம். பொதுப்பெயர்கள் அவர்கள்மூலம் சிறப்புற்றதே இவற்றிற்குக் காரணமாகும்- நாம் முன்னர் விளக்கியபடி உலகிலுள்ள எல்லா மதக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தன்னுள் அடக்கியுள்ள வேதாந்தமானது அத்துவித மார்க்கத்தையே குறித்ததெனப் பின்னாளில் தோன்றிய அபிப்பிராயம் ஆதி சங்கரர் பிரஸ்தான திரயமென அழைக்கப்படும் உபநிடதம், கீதை, பிரம்மசூத்திரம் மூன்றினிற்கும் வரைந்த பாஷ்யங்களில் தனிச்சிறப்பிலிருந்து உதித்ததாகும். மேற்பார்வைக்கு முரண்பாடுடையனவாகத் தோன்றும் எத்தனையோ கோட்பாடுகள் சைவம் வைஷ்ணவம் என்ற இருமார்க்கங்களின் மூலம் ஆதிக்கம் செலுத்திய பின்னரும் அத்துவித வேதாந்தம் தன் சிறப்புக்குன்றாது உலகெங்கும் பரவியிருப்பதற்குக் காரணம் சங்கரர் ஆரம்பித்த அத்யாத்ம சேவையை அவருக்குப்பின் பரம்பரை பரம்பரையாக வந்த ஆசாரியர்கள் தொடர்ந்து செய்து வந்ததேயாம்.

அவர் நிறுவிய மடங்கள் பின்னாளில் பத்தாகப் பிரிந்தன. அவற்றுள் சிருங்கேரி மடத்தைச்சேர்ந்த 'சரஸ்வதி' சந்நியாச சங்கத்தினர் அறிவாலும் அனுபவத்தாலும் சிறப்புற்றுவிளங்கி அநேக வேதாந்த நூல்களை இயற்றியுள்ளார்கள். சங்கரர், பத்மபாதர், ஹஸ்தமலகர், சுரேஸ்வராசாரியார், வஜ்ஜாஸ்பதி, ஸ்ரீஹர்ஷர், வித்யாரண்யர், முதலானவர்களின் நூல்களின் சாரத்தையெல்லாம் தெளிந்தெடுத்து 'வேதாந்தசாரம்' என்னும் அரிய நூலாக அருளிய சதானந்த யோகீந்தரரும் இந்த சரஸ்வதி வகுப்பைச் சேர்ந்தவராகும். கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்தவர் இவர். 1588-ம் ஆண்டில் வெளிவந்த 'சுபோதினி' என்னும் விரிவு நூல், அவரின் சீடரான கிருஷ்ணானந்த சரஸ்வதியின் சீடரான நரசிம்ம சரஸ்வதியால் வரையப்பட்டதாகும். 'அத்வைதசித்தி' என்னும் நூலின் ஆசிரியரான மதுசூதன சரஸ்வதியும், 'பிரம்மானந்தியம்' என்னும் நூலை இயற்றிய பிரமானந்த சரஸ்வதியும் இதே குருபரம்பரையைச் சேர்ந்தவர்களாகும். அதே காலத்தில் தென்னாட்டில் வேதாந்தப் பணிசெய்தவர் பரமசிவேந்திர சரஸ்வதியாவர். அவரின் சீடரே நேரில் பரிபூரண பிரஹ்மபாவ நிலையடைந்த சிவயோகியாம் சதாசிவேந்திர சரஸ்வதியாவர். 'சூதசம்ஹிதாசாரம்' என்னும் நூலைத் திரட்டித் தந்தவர் இந்த மஹானே. தென்னாட்டில் சாதனையற்ற சாஸ்திரப்படிப்பால் விளைந்த வேதாந்த—சித்தாந்த சண்டைக்குச் சாவுமணியடித்தவருள் இந்தப் பெரியாரும் ஒருவர். இவரும் தாயுமானாரும் ஒருகாலத்தவர். இருவரும் வேதாந்த—சித்தாந்த சமரஸ நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணத்தைச் சேர்ந்தவர்கள். தாயுமானாரின் அரிய பாடல்கள் தமிழில் காலதாமதமின்றி அச்சேறி வெளிவந்ததோடு நின்றுவிடாது, மேல்நாட்டு அறிஞரின் கவனத்தை ஈர்க்கும் பெருமையுடைத்தாய், ஆங்கிலம் முதலாய அன்னிய மொழிகளிலும் வெளிவந்துள்ளன. நாயன்மார்கள் சிவமாகக் கண்ட பரம்பொருளை, ஆழ்வார்கள் விஷ்ணுவாகக்கொண்ட மெய்ப்பொருளை, தாயுமானார் நிர்க்குணவஸ்துவாகவும், அகண்ட சச்சிதானந்தமாகவும் சிவனாகவும், சக்தியாகவும் பாவித்துப் பாடி பழைய வேதாந்த மதத்திற்கு ஓர் புதுச் சமரஸ நெறியைக் காட்டினார். சங்கரர் செய்த தொண்டையே அவரும் செய்தார். சரஸ்வதி சங்கத்தைச் சேராதிருந்தும், அவர்களைவட நாட்டில் செய்த பணியை அவர் தென்னாட்டில் செய்தனரெனலாம்.



சமய கோடிகளெல்லாம் தத்தம் மனப்பக்குவத்திற்கேற்ப மெய்ப்பொருளை எங்கு நிறைகின்ற வஸ்துவை—ப்பாவிக்கும் பல்வேறு விதங்களை இறைவன் திருவிளையாடலாகக் கண்ட தாயுமானார், வேதாந்த சாஸ்திரங்களிலடங்கிய தத்துவங்கள் அனைத்தினையும் ஒருபாட்டில் அமைத்துள்ள அழகினைச் சிந்தித்துப் பாருங்கள்:—

வேதமுடனாகமபுராணமிதிகாசமுதல்
வேறுமுளகலைகளெல்லாம்
மிக்காகஅத்துவிதத்துவிதமார்க்கத்தையே
விரிவாயெடுத்துரைக்கும்
ஓதரியதுவிதமேயத்துவிதஞானத்தை
உண்டுபணுஞானமாகும்
ஊகம்அனுபவம்வசனமூன்றுக்குமொவ்வுமீ
துபயவாதிகள்சம்மதம்
ஆதலினெனக்கினிச்சரியையாதிகள்போது
மியாதொன்றுபாவிக்கநான்
அதுவாதலாலுன்னைநானென்றுபாவிக்கின்
அத்துவிதமார்க்கமுறலாம்
ஏதுபாவித்திடினுமதுவாகிவந்தருள்செய்
எந்தைநீகுறையுமுண்டோ
இகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
எங்குநிறைகின்றபொருளே.

சங்கரர் விளக்கிய அத்துவிதக் கொள்கையை இவ்விதம் சுருக்கமாகவும், ஆழமாகவும், தெளிவாகவும் விளக்கியவர் தாயுமானாருக்குமுன் வேறெவருமிலர். இவ்விருமகான்களும் முறையே வடமொழியிலும் தென்மொழியிலும் செய்த 'ஒப்புயர்வற்ற அத்யாத்மப் பணியை உலகமொழியாம் ஆங்கிலத்தில் இன்று செய்து கொண்டிருப்பவர் இமயமலை அடிச்சாரலில் உலகத் தெய்வநெறிக் கழகத்தலைவராக விளங்கும் சுவாமி சிவானந்த சரஸ்வதியாவர். வேதாந்த—சித்தாந்த சமரஸ நன்னிலை பெற்ற இந்த வித்தகச் சித்தரும் முந்திய இருவரைப்போலத் தென்னாட்டைச் சேர்ந்தவரென்பதை மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் தெரியத்தருகின்றோம். அவரின் வரலாற்றுச்சுருக்கத்தை யோகி ஸ்ரீ ஸத்

யார்க்காவின் மின்சார நடையில் பிறிதோரிடத்திற் காண்க. மக்களின் உள்ளத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் ஆத்மீக உணர்ச்சியைத் தூண்டும் உன்னத நோக்குடன் இந்த மகான் செப்ரம்பர் மாசம் ஒன்பதாந் தேதி ஓர் அகில-இந்திய யாத்திரையை ஆரம்பிக்கின்றார். அத்தொடர்பில் அவர் கொழும்புக்கும் வந்து திரும்ப உடன்பட்டுள்ளார். இலங்கைவாழ் இந்துக்கள் செய்து கொண்ட புண்ணியமே, உலகம் போற்றும் இந்த உத்தமரின் தரிசனத்தை அதிகம் செலவும் சிரமுமின்றிப் பெறும் பாக்கியத்தை அளித்துள்ளதெனலாம். இப்புண்ணிய புருஷரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இம்மாத 'ஆத்ம ஜோதி' சிவானந்த மலராக மிளிர்கின்றது. அவருக்கு நல்வரவுகூறி முடிக்கின்றோம்.

மோனமாங் கைலா யத்தின்
முகட்டி னாற்றெடுத்து வேத
கானத்தோ டிறங்கிங் கங்கைக்
கரைதனில் தவத் தமர்ந்தே
தீனரைக் காப்ப தற்காய்த்
திவ்ய ஜீவியத்தை நாட்டி
ஞானமு தளிக்குஞ் சுத்த
சிவானந்தர் திருத்தாள் போற்றி.

## சிவானந்தர் தோத்திரம்.

கங்கையைப் போலத் தெளிந்தநல் உள்ளம்;
கருணைமா முகிலெனத் தோற்றம்;
திங்களைப் போல நிலவிடும் சாந்தம்;
தினகரன் போலொளிர் ஞானம்;
தங்கமே யனைய சாதுக்க ளுடனே
சதானந்தக் குடில்வே தாந்தச்
சிங்கமே போன்று ப்ரணவ கர்ஜனைசெய்
சிவானந்த ஜோதியைப் பணிவாம்.

—யோகி ஸ்ரீ சத்யார்க்கா.



# ஐம்பத்துமூன்று ஆண்டுகளுக்குமுன்.

——:-:——

(அமெரிக்காவில் சர்வமத மகாசபையில் செய்த வேதாந்த கர்ஜனையின் மூலம் இந்துமதத்திற்கு என்றுங் குன்றாப்புகழை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தேடிக்கொடுத்தபின்னர் 1897-ம் ஆண்டு ஜனவரிமாசத்தில் சுவாமி விவேகானந்தர் இலங்கை மார்க்கம் தாய் நாடு திரும்பினார். அந்தமாசம் 23-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஓர் மகத்தான வரவேற்பு அவருக்கு அளிக்கப்பட்டது. அப்போது சுவாமிகள் செய்த பிரசங்கத்தின் இறுதி மொழிகளை இங்குதருகின்றோம். அவற்றிலடங்கிய அருங்கருத்துக்களே அடுத்தமாசம் இலங்கைக்கு விஜயம் செய்யப்போகும் சுவாமி சிவானந்தரின் திருவாக்கில் மலர்கின்றன. ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவை வெளிவருதல் சாலவும் பொருத்தமுடைத்து)

—ஆசிரியர்'

நமது மதம் அனைவருக்கும் இடம் கொடுக்கிறது; எவரையும் தள்ளுவதில்லை. நமது சாதிமுறை சமயத்துடன் சேர்ந்ததாகத் தோன்றியபோதிலும், உண்மையில் அது சமயத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. சாதிகள் நம் சமூகத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவை. அவற்றின் அவசியம் நீங்கும்போது அவர்கள் தாமாகவே மறைந்துவிடும். நமது சமயத்தைப் பற்றி நான் சொல்லவிரும்பியவற்றை உங்களுக்கு இன்று சொல்லிவிட்டேன். காலம் வேண்டிநிற்கும் ஒரு விஷயத்தை உங்களுக்கு எடுத்துக்கூறி எனது பேச்சை முடிக்க விரும்புகின்றேன்.

மகா பாரதத்தை வரைந்த வியாசமுனிவர் பின்வருமாறு கூறியுள்ளார்! இந்தக் கலியுகத்தில் மிக விசேடித்த சாதனை யொன்றுண்டு. மற்றயுகங்களில் அனுஷ்டிக்கப்பட்ட தவநெறிகளும் யோகங்களும் இந்த யுகத்தில் அனுஷ்டிக்கக்கூடியனவாகவில்லை. இன்று நாம் செய்யக்கூடிய அரிய சாதனை தான தர்மமே. அறங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தது, ஆத்மீகஞானத்தை உபதேசித்தலாகும். அதற்கடுத்தது லௌகீக அறிவைப்புகட்டல் இதற்கடுத்தது ஒருவனுடைய உயிரைக்காப்பாற்றல், கடைசியாக இருப்

பதே உணவும் நீரும் அளித்தல். ஆத்மீகஞானத்தை அருளுபவன் மக்களைப் பல பிறவிகளிலும் பிறந்து உழலாமல் காப்பாற்றுகிறான். உலக அறிவை அளிப்பவன் ஆத்மிக அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டுகிறான், மற்றைய தானங்களெல்லாம், ஒரு உயிரைக் காப்பாற்றுதல் உட்பட, இவ்விரண்டிற்குந் தாழ்ந்தவையாகவே உள்ளன. ஆதலால், அத்யாத்ம அறிவைப் புகட்டுதலே நாம் செய்யக்கூடிய பணிகள் எல்லாவற்றினும் சிறந்ததென்பதை நீங்கள் உணர வேண்டும். அதுதான் எல்லா உதவிகளிலும் பெரிய உதவி. நமது சமய சாஸ்திரங்கள் ஆத்மீக பேரின்ப வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் வற்றா ஊற்றுக்களாக இருக்கின்றன. துறவுக்குச் சிறப்புக்கொடுத்த நம் தாய்நாட்டில்தான் ஆத்மாவை அனுபூதியில் அறிந்த மகான்கள் பலர் இருக்கிறார்கள். நான் உலகமுழுவதையும் சுற்றிப்பார்த்துள்ளேன்; என் சொல்லை நம்புங்கள், மற்றைய நாடுகளில் சமயத்தைப்பற்றிப் பலர் பேசலாம்; ஆனால் அதன் கொள்கைகளை வாழ்க்கையோடு பிணைத்து அனுஷ்டிப்பவர்கள் இங்குதானுள்ளனர். வெறும் பேச்சு மதயாகாது கிளிபேசும்; இப்போது இயந்திரங்களும் பேசுகின்றன. பூரண துறவி ஆத்மீக உணர்ச்சியும், ஆத்மீக வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்கும் பொறுமையும், அளவற்ற அன்பும் ஆகியவைதான் ஆத்மீக வாழ்வின் அறிகுறிகள். இத்தனை உன்னத கருத்துக்களும், அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் அனுஷ்டிக்கும் பெரியார்களும் நம் நாட்டில் நிறைந்திருக்கும்போது, இந்த உயர்ந்த லட்சியங்களை பணக்காரன் பிச்சைக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், என்ற வித்தியாசமின்றி நம் நாட்டு மக்கள் அனைவரிடமும் பரப்புவதுடன், வெளிநாடுகளிலும் அவற்றை நாம் பரப்பாமல் இருப்பது பெரும் பாவமாகும். நமது கடமைகளுள் தலையாவது இதுவே. பிறருக்கு நாம் கொடுக்கும்போது நாம் நம்மையே மேன்மைப்படுத்துகிறோம். உங்கள் சமயத்தின்பேரில் உங்களுக்கு உண்மையான அன்பு இருந்தால், உங்கள் தாய்நாட்டின்மீது உங்களுக்கு அன்பிருக்குமானால், நீங்கள் இந்த அரும்பணியை ஏற்று அயரா முயற்சியுடன், நமது சாஸ்திரங்களில் புதைந்து கிடக்கும் அரிய பொக்கிஷங்களான அத்யாத்ம தத்துவங்களை, அவற்றின் சொந்தக்காரரான உங்கள் சகோதர மக்களுக்கு எடுத்துப் புகட்டுங்கள்.



நாம் உணர்ந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயம் இன்னுமொன்றுண்டு. நீடித்தகாலமாக நாம் பொறாமையில் மூழ்கிக்கிடக்கிறோம். ஒருவனுக்கு அதிக மரியாதை கிடைத்துவிட்டால், எனக்கு ஏன் அது வரக்கூடாது என்ற முறையில் பொறாமை கொள்ளும் மனப்பான்மை நம்மிடம் நிறைந்திருக்கிறது. இறை வழிபாடு நடக்கும் ஆலயங்களில்கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகிறோம். இதைவிடக் கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்க முடியும்? இப்பெருமைக்குணம் நம்மை விட்டகலவேண்டும். இந்தியாவின் கீழ்நிலைக்கு இந்த அடிமைத்தனமே காரணம். அதிகாரத்தை விரும்புவோர் அநேகர்; சேவை செய்யவிரும்புவோர் ஒருவருமில்லை. கீழ்ப்படியப் பழகியவர்கட்கு அதிகாரம் தானே வரும். ஆகையால் முதலில் தொண்டர்களாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் மூலம் தலைவராகும் தகுதியை எளிதில் பெறலாம். பொறாமையை மனத்தினின்று அகற்றினால், பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும். நமது ஆன்றோர்கள் மிகவும் அற்புதமான செயல்களைச் சாதித்துள்ளனர். நாம் இப்பொழுதும் அவற்றைப்பற்றி பெருமைபாராட்டிக்கொள்கின்றோம். நாமும் மகத்தான காரியங்களைச் செய்யப்போகின்றோம். நமது பின் சந்ததியார் அவற்றையெல்லாம் அன்புடனும் நன்றியுடனும் பாராட்டுவார்கள். ஆண்டவனுடைய திருவருளால் இங்கிருப்பவர்கள் அரிய பெரிய காரியங்களைச் செய்வார்களாக.

## திருத்தாண்டகம்.

திங்களணி செஞ்சடையெம் பெருமான் வைகும்
திருக்கயிலை தனையடையும் பாதை தோன்றும்
கங்கைவழிந் திறங்கிவரும் காட்சி தோன்றும்
கற்பனைகள் கடந்த நிலை தானே தோன்றும்
மங்காத புகழெமக்குத் தேடி வைத்த
மஹரிஷிகள் மகிமைமறு படியுந் தோன்றும்
சிங்கரவி தனிலுதித்துச் சகத்தைக் காக்கும்
சிவானந்தர் சந்நிதியைச் சார்ந்த போதே.

—க. இ.

# வாழ்க என்றும் வாழ்கவே !

——;-:——

(க. இ.)

வாழ்க சிவானந்தன் ! வாழ்க சிவசக்தி !
வாழ்க சிவக்கதிரே !
வாழ்க சிவயோகி ! வாழ்க சிவஞானி !
வாழ்க சிவமணியே ! (வாழ்க)

பத்த மடைதன்னில் பார்வதி கர்ப்பத்தில்
பாலனாய் வந்துதித்தான்
எத்திசை மக்களும் ஏத்திப் பணிந்திடும்
என்னருஞ் சித்தனவன். (வாழ்க)

சர்வசித் தாண்டினில் சகத்தினர் உய்திடச்
சாந்தன் அவதரித்தான்
சர்வசித் திகளுஞ் சகசமாய்ப் பெற்றிட்ட
சற்குரு நாதனவன். (வாழ்க)

அநுபவ ஞானியாம் அப்பைய தீட்சிதர்
அரிய மரபில்வந்தோன்
அநுபூதிச் செல்வத்தை அள்ளி வழங்கிடும்
அத்யாத்ம வள்ளலவன். (வாழ்க)

மக்கள் உடற்பிணி மாற்றுங்கலை தேறி
மருத்துவ னாய்வாழ்ந்து
துக்கப் பிறவிநோய் துடைக்கும் மருந்தினைத்
தேடி யெமக்களித்தான். (வாழ்க)

மோன நிலைநின்ற முத்திநெறி காட்டும்
முனிவர் தலைவனவன்
ஆனந்தக் குடீரில் அடியாருடன் வாழும்
அற்புத யோகியவன். (வாழ்க)

பாரத பூமிசெய் பாக்கியத் தால்வந்த
பரம ஹம்ஸனவன்
பார்முழு தும்இன்று பாடுதவன் புகழ்
பாடிட நீரும்வாரீர். (வாழ்க)



# சிவானந்த ஜோதி.

——: :——

(யோகி ஸ்ரீ ஸத்யார்க்கா.)

சிவானந்தரை நினைக்கும்போது இமாலயமே முன்வந்து கம்பீரமாக நிற்கிறது! மலைபோல ஆள், இந்தியாவிலேயே அப்படிப்பட்ட ஆளைக்காணல் அரிது. கார்மேகவர்ணம், முகத்தில்நல்ல கலை, மாசற்றகுழந்தையுள்ளம், வஞ்சமற்ற தெளிந்தபேச்சு, கிணீரென்ற கிண்கிணிக்குரல், குயில்போன்ற சரீரம், மனம் உருகி உருகி இறைவனையே எண்ணிப் பக்திரசத்தில் வழிந்தோடும் பரம பிரேமை, அற்புதமான பணிவு, 'உண்மையை உண்மை, பொய்யைப் பொய்' என்னும் துணிவு, எப்போதும் வேதாந்த சிந்தனை சிந்தையில் உதித்ததை அப்படியப்படியே உலகிற்கு அள்ளி அள்ளித் தரும் ஞானவன்மை, மண் பெண் பொன்னாசை சிறிதும் இல்லாத மாண்பு, அன்புமயமான கருணை, தனக்குத் தெரிந்ததெல்லாம் தாய் குழந்தைக்குச் சொல்வதுபோல் ஞானதாகம் கொண்டவர்களுக்குச் சொல்லும் தனிச்சிறப்பு—இவையே சுவாமி சிவானந்த சரஸ்வதியார்.

இவ்வளவு பெருமையுடைய சிவானந்தர் நமது தமிழர், அசல் தமிழர் என்னும்போது, தமிழ் உள்ளம் துள்ளிக் குதிக்கிறது. பல்லாண்டுகளுக்குமுன் சங்கரரும் இராமநுஜரும் இந்தியா முழுதும் சுற்றித் தமது வேதாந்தக் கொடியை நாட்டினர். சங்கரர் நாட்டிய அத்வைதக் கொடியையே இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ராமதீர்த்தர் முதலிய மகான்கள் உலகெல்லாம் கொண்டு சென்று திக்விஜயம் செய்தனர். அந்த கொடியை இன்று இமாலயத்தில் ஆனந்தக் குடிலில் பலமாக நாட்டியிருக்கிறார் நமது சிவானந்தர். இருந்த இடத்திலிருந்தே தன் காலத்திலேயே, இவ்வளவு அரிய ஞானசேவை புரிந்த பெரியார், சிவானந்தரே. இமாலயத்தில் இன்பக்குடிலில் விளங்கும் செந்தமிழ் விளக்கான சிவானந்த ஜோதியின் வரலாற்றைத் தமிழர் அறிக.

கைலை முதல் கதிர்காமம் வரையில், மாஸ்கோ முதல் நியூயோக் வரையில் புகழ் பரவிய இந்தத் தமிழ்ச் சுடர் தாமரவருணி நதிக்கரையில் உதித்தது. அகஸ்திய சித்தரும், சுந்தரயோகிக

ளும், அப்பைய தீட்சிதரும் விளங்கிய அதேநாட்டில் நமது சிவானந்தஜோதியும் எழுந்தது. அப்பைய தீட்சிதரின் மரபில் வந்தவர் வெங்குவையர். அவர் பத்தமடைக்காரர். பத்தமடை சேரமாதேவிக்கருகேயுள்ள அழகான கிராமம். ஆறும் சோலையும் பூவும் கனியும் அதை அழகு செய்கின்றன. அங்கே இன்றும் வெங்குவையர் குடும்பத்தை மெச்சிப்பேசுவார்கள். வெங்குவையர் கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றுப் படிப்படியாக உயர்ந்து எட்டையபுரம் தாசில்தாரானார். வெங்குவையர் தங்கக்கம்பி; மகா சிவபக்தர்; சிவநிஷ்டை தவறாத மகான்; ஈகையிற் சிறந்தவர்; அவர் மனைவியும் கற்பும், அன்பும் கருணையுங்கொண்ட உத்தமி. இருவரும் செய்த தவப்பயனாகவே "குப்புசாமி" (சிவானந்தா) பிறந்தார். குப்புசாமி பத்தமடையில் தாய்வீட்டில் பரணி நட்சத்திரத்தில் (8-9-1887) பிறந்தான். ஐந்து வயது மட்டும் அங்கேயே வளர்ந்தான் தகப்பனாருக்குத் தாசில் வேலையானதும் எட்டையபுரம் சேர்ந்தான்.

எட்டையபுரம் பாஞ்சாலங் குறிச்சிக்கு அருகேயுள்ளது. வீரமும் கலையும் விளையாடும் ஊர் அது. கட்டபொம்மு ஊமையன் வீரவரிசைகள், அலெக்சாந்தர், தாமஸ் நாவலைப்பேசவிருக்கும். சீறுப்புராணம் பாடிய உமர்புலவர், கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியார், இசை முரசம் முத்துசாமி தேசிகர், சங்கீதமணி சுப்பராம பாகவதர் போன்ற பெரும் புலவர் விளங்கிய ஊர் எட்டையபுரம். ஊரில் பாட்டும் பஜனையும் முழங்கும்; கிளியும் குயிலும் கொஞ்சும். இத்தகைய புலவர் புரத்தில் குப்புசாமியின் வாலிபம் ஓடிவிளையாடியது. குப்புசாமி விளையாட்டிலும் வருங்கால சிவானந்தரை விளக்கினார். அவன் உள்ளம் தகப்பனாரைப் போலவே, சிவநாம ஜபத்தில் பழுத்தது. குப்புசாமி எதுப்புப் பாடங்களையும் வணங்கிக் கற்பான்; வெகுமதிகளுடன் தேறுவான். அவனிடம் ஒரு வசீகர சக்தியிருந்தது. எட்டையபுரம் அரசர் பள்ளிக்கூடத்திற்கே அவனால் பெருமை.

1903-ல் குப்புசாமி மெட்ரிக்குலேஷன் தேறினான். குப்பு ஸயன்ஸிலும் நிபுணன், அவனுக்கு டக்டர்வேலை பிடித்திருந்தது. அதனால் பலருக்கு உபகாரம் செய்யலாமல்லவா? மருத்துவக் கல்லூரியிற்சேர்ந்து படித்து வைத்தியப் பரீட்சையிலும் குப்பு



முதல்தரமாகவே தேறினான். டாக்டர் குப்புசாமி சிலகாலம் அங்குமிங்கும் தொழில்பார்த்து 1913-ல் கப்பலேறி மலேயா சென்றார். அங்கே முதலில் நெகிரி செம்பிலானிலும், பிறகு ஜோகூரிலும், சிங்கப்பூரிலும் சர்க்கார் வயித்தியராயிருந்தார். அவர் வெறும் பணமடிக்கும் 'சீசா டாக்டர்' அல்ல. டாக்டர் குப்புசாமிக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் உண்டு. டாக்டர் குப்புசாமி பணத்திற்காகத் தொழில் நடத்தவில்லை. பரோபகாரத்திற்கே சேவைசெய்தார். அவர் அன்புமயம், கொடைவள்ளல். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு அவரிடம் பெருமதிப்பு. பெரிய துரைகள் இமிராகச் சினந்தாலும், இவர் இதமாகப்பேசி அவர்களுக்கு ஆறுதல் தருவார். நோயாளிகளைத் தாய்போலக் கவனிப்பார். அவர் துயர் தம்துயரெனத் தீர்ப்பார். ஏழை எளியவர்கள் நோயானால் தாமே சென்று பார்த்துத் தக்கசிகிச்சை செய்வார். தன்னுடலைப்போலப் பிறர் உடலுக்கும் வைத்தியம் செய்வார். சில நோயாளிகளைத் தம்வீட்டிற்குக் கொண்டுவந்தும் நோய் தீர்ப்பார். அவரிடம் ஜாதி சமய வேறுபாடே கிடையாது.

அக்காலமே டாக்டர் சிறந்த எழுத்தாளரானார். பத்திரிகைகள் வாங்கிப் பார்ப்பார். புதிய புத்தகங்களை ஏராளமாக வாங்குவார். வேதாந்த நூல்களையே அவர் கருத்தூன்றிப்படித்தார். அவரை முதலில் வசீகரித்தது கடப்பை சச்சிதானந்த யோகியார் எழுதிய ஜீவப்பிரம்மைக்கிய வேதாந்தரகசியமே. பிறகு விவேகானந்தர், ராமதீர்த்தர், சங்கராச்சாரியார், பி. ஆர். ராஜமையர் முதலியோரின் வாக்குகள் அவரை வசீகரித்தன. ஞானநூல்களைக் கற்றுச் சிந்தித்ததன் பயனாக அவர் உள்ளத்தில் தன்னறிவு வேட்கை யெழுந்தது. உலகியல்பு அவருக்குத் தெரிந்தது. உடல் அநித்தியம்; அது விழுமுன் பிரம்மஞானம் பெறவேண்டுமென்று அவர் நெஞ்சு துடித்தது. "ஓம் நமச்சிவாய" என்ற சிவமந்திரத்தைக் கொண்டு அவர் பரம்பொருளைத் தேடினார். ஒருநாள் எல்லாம் சிவமயம் என்னும் அனுபவம் வந்தது; சிவம் அழைத்தது. வேலையை ராஜீநாமாச்செய்தார், உலகாசையை உதறித்தள்ளினார்; சென்னைக்குச் சீட்டுவாங்கிக் கப்பலேறினார். சென்னை சேர்ந்ததும் சாமான்களை ஒருபழைய நண்பர்வீட்டில் ஒப்படைத்துவிட்டு நேரே காசிக்குச்சென்றார்: கங்கையில் மூழ்கினார். வி

வசாததரிசனம் செய்தார். கையில் மிச்சமிருந்த பணமெல்லாம் சிவார்ப்பணமாயின. நாளைக்கவலையில்லை. தன்னை முற்றினும் சிவனுக்கே அடைக்கலமாக்கிக் காற்றைப்போலப் புறப்பட்டார். நாசிக், பூனா, பந்தர்புரி, ரிஷிகேஷம் முதலிய திருத்தலங்களைக் கண்டார். ரிஷிகேஷம் அவருக்குப் பரம சாந்தியை அளித்தது. சிவநாமம், ஜெபம், பஜனை, சிவத்தியானம் இவற்றிலேயே அவர் காலங்கழித்து வேறெந்தச் சிந்தனையும் அற்றிருந்தார். ஒரு நாள் டாக்டர் சாது கங்கையில் இறங்கி நீராடப்போனார்; அப்போது மகாதேஜஸ்வியான ஒரு சந்நியாசி வந்தார்; அவர் சிருங்கேரி மடத்தைச் சேர்ந்தவர்; பரமஹம்ஸத்துறவி. பெயர் சுவாமி விச்வானந்த ஸரஸ்வதி; காசிவாசி, அனுபவ வேதாந்தி; தம் ஞானக்கனலைப் பொழிய ஒரு தக்க பாத்திரத்தை நாடினார். அவர் டாக்டர் குப்புசாமிக்கு முறைப்படி பரமஹம்ஸரீதியில் சந்யாசமும், கஷாயமும் அளித்து அவருடைய சிவபக்தியைக்கண்டு "சிவானந்த சரஸ்வதி" என்ற தீக்ஷாநாமமும் அருளினார்.

சிவானந்தர் பரிவ்ராஜகராக நாடெங்கும் சுற்றினார்; 1930-ல் காலால் நடந்தே கைலாச யாத்திரை சென்றார்; மானசரோவரத்தில் நீராடினார்; இமயமலையிலுள்ள தலங்களில் தவம்புரிந்தார். பிறகு இந்தியாவெங்கும் இராமேஸ்வரம் வரையில் சுற்றினார். அவர், சென்ற ஊர்களில் பிரசங்கம் செய்தார்; யோகாசனங்கள் காட்டினார்; சன்மார்க்கப் பிரசங்கமும் பஜனையும் நடத்தினார். உபநிஷத் உண்மைகளைத் தாமே அனுஷ்டித்துக்காட்டினார். இவ்வாறு நான்காண்டுகள் நாடெங்கும் ஞானப்பிரசாரம் செய்து ரிஷிகேசத்துக்குத் திரும்பிக் கங்கைக்கரையில் ஓர் அமைதியான இடத்தில் சிறு குடில்கட்டி வசித்தார். அந்தக்குடிலே ஆனந்தக் குடில் ஆனது. ஆயிரக்கணக்கான அன்பர் சுவாமிகளை நாடி வந்தனர். சுவாமிகளின் இருக்கை சிவானந்த ஆசிரமமாக, சிவநகரமாக வளர்ந்தது.

மனிதப்பிறவி அரிது; அதனினும் அரிது ஞான வேட்கை; அதனினும் அரிது மெய்வழிகாட்டும் குரு. "எனது யான் எனக்கே வணக்கம்" என்று அகம்பாவச் சிகரத்தில் ஏறி அடிமைகளைக் கொண்டு புகழ்தேடும் குருமார்களைப் பார்க்கிறோம். தவத்தின் போர்வையில் கள்ளும் காமமும் பணத்தாசையும்கொண்ட



# ரிஷிகேஷ தபோதனர்.

——:-:——

(ஸ்ரீமதி. சிவானந்தம் தம்பையா.)

சுவாமி சிவானந்த சரஸ்வதியவர்கள் ரிஷிகேஷத்திலிருந்து தவம்புரியும் தத்துவஞானகுருவாய் சமூகத்தொண்டாற்றி நித்திய அநித்தியங்களை யுக்தி அனுபவ முறைகளால் சந்தேக விபரீதமின்றி நம்போன்றவர்கட்கெல்லாம் இனிது விளக்கி, ஆத்மீகமாகிய முத்திவழிகாட்டும் கருணைக்கடலாய் இனிது விளங்குகிறார். சுவாமிகளது இறைவழிபாடுகளிலும் யோக சம்வாதங்களிலும் உபந்நியாசங்களிலுமுள்ள சாராம்சங்களை ஊகித்துணரும் பாக்கியம் படைத்தோர்க்கே இவ்வுண்மை புலனாகும். இவ்வித அருட்செல்வரது மேன்மையுந் தூய்மையுமான மஹா சந்நிதியில் செல்வத்தின் மாண்பும், மன்னனின் மாட்சியும் சோபையிழந்து மங்கிவிடுகின்றன. அன்றியும், இமயமலைச்சாரில் எழில்பெற்றோங்கும் சிவானந்தாச்சிரமத்தின் சூழ்நிலையில் விபரிக்கமுடியாத ஓர் சக்தி நிலவுகிறது.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

மோசடிப் பேர்வழிகளைப் பார்க்கிறோம். ஆசைகளை அறவே வெறுத்து, உலகப் புகழைத் தூசிபோல் ஒதுக்கி எவ்விதமான செருக்கும் பிகுவும் இல்லாமல் பிள்ளைக்குத் தாய்ப்பால் சுரப்பது போலவே சரளமாக ஞானாம்ருதத்தைத் தரும் குரு யார்? இதோ என்று சிவானந்தரைக்காட்டுவோம்! நாம் தலையை நீட்டவேண்டியதுதான், "ஓம்" என்று சங்கநாதம் கேட்கிறது. நாம் வணங்குமுன், இந்த ஞானமலை நமக்கு வணங்குகிறது. என்னே இவர் பணிவு! அவர் பணிவும் வணக்கமும் நமது அகங்காரத்தைத் தலைகுனிந்தோடச்செய்கிறது.

எனதுயான்என்னும்ஆசையைஅடக்கி
இருவிகற்பற்றவர்யாவர்
தனகனவாழ்வின்சாம்பலைக்கண்டு
சுகவியல்பறிந்தவர்யாவர்?
மனதினைவென்றமாசிலார்யாவர்?
மட்சுகப்பற்றிலார்யாவர்?
என்திருகரத்தால் அவரடிபிடித்தே
இறைஞ்சலின் இன்பமொன்றுளதோ?

எனது மனம் சிவானந்தரை வணங்குகிறது. (சுருக்கப்பட்டது.)

கீழ்த்தர இயற்கையை வென்று மன்னுயிரையும் தன்னுயிர்போல் மதித்து, பணிசெய்து கிடப்பதே தம் கடனாகக்கொண்டு உயிர்வாழும் மகாபுருஷர்களைப்பற்றிய திருஷ்டாந்தங்கள் எவ்வளவுதான் அகம்பாவிதமாகப்பட்டபோதிலும், கற்பனைக்கெட்டாத காலந்தொட்டு ஞானிகளும் ரிஷிகளும் மலிந்துவிளங்கிய பாரதநாட்டில், மாயையினின்றும் விடுதலைபெறுவதற்காக ஐம்புல நுகர்ச்சியை அறவேயொழித்து, துறவுபூண்ட அநேக புருஷர்களும் ஸ்திரிகளும் வாழ்ந்தனரென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். உலகத்தின் பேரறிஞர்களான விஞ்ஞானிகளெல்லாம் மனிதவர்க்கத்தையே பூண்டோடு அழித்துவிட வழிவகைகளையும் சாதனங்களையும் ஆராய்வதில் போட்டிபோடும் இக்காலத்திலும்கூட, அத்யாத்ம முதிர்ச்சியடைந்த சில மகா புருஷர்கள், தாம் தாம் கொண்ட நம்பிக்கையின் வழியே முக்திநிலை எய்தவும், மற்றவர்களை வீடுபேறடையச் செய்யவும் முனைந்து வருகிறார்கள். இத்தகைய உத்தம புருஷர்கள் அளவு கடந்து பாரதநாட்டில் தோன்றியிருக்கலாம். இருந்தபோதிலும் அருச்சுனனுக்குப் பகவான் கிருஷ்ணன் போதித்தவாறு ஆங்காங்கு மலிதருள் மாணிக்கம்போன்ற சில மகான்கள் தோன்றி, தன்னலமற்ற தியாக மேம்பாட்டினால் கயிலையங்கிரிபோல் தம்மினத்தவரின் மத்தியில் திகழ்ந்திருக்கின்றார்கள். மனிதவர்க்கத்தின் பெரும்பகுதியினர்மேல் ஆன்மிகபலத்தினால் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். அன்பு, அஹிம்சை, மனிதவர்க்கத்தின் ஐக்கியம் ஆகியவற்றைப் போதித்து பூதலத்தோரால் போற்றப்பட்ட மகாத்மா காந்தி இத்தகையவருள் ஒருவராவர். சுவாமி சிவானந்த சரஸ்வதியும் இத்தகைய அன்புநெறியைக் கடைப்பிடித்து, ஆன்மீக ஒழுக்கமூலம் கைவல்யம் அடையும் வழியைத் தம் சீடர்களுக்கு அருளிவருகிறார்.

'என்னுடைய வாழ்க்கைப் பரிணாமத்தில், இந்த மகா தவசிரேஷ்டரின் பாதாரவிந்தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்கு 1944-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கிட்டியது. சுவாமியை நேரில் தரிசிக்கவேண்டுமென்னும் ஆவல் நாளொருவண்ணம் கொழுந்துவிட்டெரியத்தொடங்கியது. ரிஷிகேஷத்தில் ஞானியைத் தரிசிக்க இமயத்தின் அடிவாரத்திற்கு செல்வதென முடிவுசெய்தோம். ஆச்சிரமத்தை நாங்கள் அடைந்தபொழுது சுவாமிஜி தன்னுடைய அறையில் இருந்தார். சாயங்காலம் சுமார்



நான்குமணியளவில் நாங்கள் தங்கியிருந்த குடீரத்துக்குக் கருணைவள்ளல் தாமாகவே நடந்துவந்தார். சுவாமிகளின் தெய்வீக சந்நிதானத்தில் சித்தவிருத்திகளடங்கி சாந்தம் எய்தினோம்.

அவருடைய அன்பு கனிந்த மொழிகளைக் கேட்டமாத்திரத்தே உலக கவலைகளுந் துன்பங்களும் பறந்தோடிவிடுகின்றன. நம்மை அவர் ஆகர்ஷித்துவிடுகிறார். சுவாமிஜிக்கு சீடர்கள்மேல் உள்ள கரையிலாக் கருணையினால் அன்னார் ஆனந்தக்குடிலை விட்டுப் பிரிந்து தத்தம் இல்லம் ஏகிய பின்னரும்கூட அருள் பாலித்த வண்ணமேயிருக்கிறார். இதை உன்னும்பொழுது உற்சாகமே பிறக்கிறது. சீடர்களின் மனக்கவலையைப் போக்கும் மார்க்கத்தை உபதேசித்தும் தம் ஞான நூல்களை அடிக்கடி அனுப்பியும், அவர்களின் ஆன்ம ஈடேற்றத்தில் அக்கறையெடுத்தவண்ணமேயிருக்கிறார்.

பாரதநாட்டின் இப்புனிதமகான் பல்லாயிரக்கணக்கான உபாசகர்களுக்கு சச்சிதானந்தத்தையும், பரம சாந்தியையும் அருளியவண்ணமிருக்கிறார். மனிதவர்க்கத்தின் க்ஷேமத்திற்காக; தனது ஆச்சிரமத்திலிருந்தபடியே மக்கள் கடைத்தேறும் வழியைக் காண்பித்துக்கொண்டிருக்கிறார். இந்த அணு சக்தி சகாப்தத்தில் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக என்னதான் சம்பவிக்கக் கூடியதாயிருந்தாலும் உய்வதற்கு ஒருவழியிருக்கத்தான் செய்கிறதென்பதை சுவாமிஜீயின் போதனைகளைக் கற்போரும் கேட்போரும் உணரத் தவறமாட்டார்கள்.

மனித வர்க்கத்திற்கு சுவாமி சிவானந்தர் அவர்கள் புரிந்துவரும் பெரும் பணியைத் தொடர்ந்து செய்துவர அவருக்கு நீண்ட ஆயுளையும் அரோக திடகாத்திரத்தையும் நிலைப்படுத்துமாறு எல்லாம் வல்ல கருணைக்கடலாகிய எம்பெருமானைப் பிரார்த்திப்போம். அவருடைய கோரிக்கை பூரணமாக நிறைவேற ஆண்டவன் அருள்புரிவாராக.

இவ்வுத்தமர் இலங்கைக்கு வருகிறார். சுவாமிகளது திருக்கண்நோக்கமானது சீடர்களைப் பந்தித்துள்ள ஆணவாதி மதங்களை எரித்து நிரதிசய இன்பமாகிய முத்தி நெறியை உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் காண்பிக்குந் தன்மையது. நமது இலங்கை மக்களாகிய சகோதர சகோதரிகள் எல்லாரும் இத்தருணத்தைத் தவறவிடாது குருதரிசனபலனைப்பெற்று நீடூழி வாழ்வார்களாக.

## சாது கூட்டத்தில் — — சேர்க்கும் தெய்வம்.

(ஆசைமுகம் மறந்துபோச்சே என்ற மெட்டு.)

கேட்ட தெல்லாம் கொடுக்கும் தெய்வம்
வாட்ட மெல்லாம் தவிர்க்கும் தெய்வம்—சாது
கூட்டத்தில் சேர்க்கும் தெய்வம்—ஆத்ம
நாட்ட மதில் கூட்டும் தெய்வம். (கேட்ட)

ஜயக்கொடி கட்டும் குல தெய்வம்
ஜெகமயக்க மகற்றும் குல தெய்வம்
தியக்க மதை தீர்க்கும் தெய்வம்
பயக்கும் சிவா னந்த தெய்வம். (கேட்ட)

மங்கள கைலையை விடுத்தார்—அவர்
கங்கைக் கரையை வந் தடுத்தார்
பங்க மில்லா காவி யுடுத்தார்—சிவ
சங்கர நாமமே தொடுத் தார் (கேட்ட)

தாமத குணத்தை வீட்டி—துஷ்ட
காமக் குரோதாதிகளை வாட்டி—தினம்
நேம முடன் நிஷ்டை கூட்டி
ஸாம கான வீணை மீட்டி (கேட்ட)

அல்லும் பகலும் அன்பர் கூட்டம்—ஜென்ம
அல்லல் செய்யும் வினைகள் ஓட்டம்
எல்லையில்லா சுகத்தில் நாட்டம்—நன்றாய்
எல்லாம் நாம் என்று கொண்டாட்டம். (கேட்ட)

எல்லாம் தன்னுரு வாகப்பார்ப்பார்—அவர்
எல்லாம் தன்னுரு வாகச் சேர்ப்பார்
எல்லாம் தன்னுயிரெனக் காப்பார்—நம்
பொல்லா ஜென்ம வினையை தீர்ப்பார். (கேட்ட)

—ஏ. எஸ். லெக்ஷிமி அம்மாள்.



## ஸ்ரீசுவாமி சிவானந்தரின் சந்நியாச வெள்ளிவிழாச் சந்தேசம்.

ஸ்ரீசங்கராசாரியருக்கு,ம் ஸ்ரீதத்தாத்திரேயருக்கும் நமஸ்காரம்.
ஒருசந்நியாசி: தாமே சாக்ஷாத் நாராயணராக இருக்கின்றார்.
மாட்சிமை பொருந்திய சந்நியாசி, பரப்பிரம்மசொருபமாகவே இருக்கிறார்
அவர் சம்சார வாசனை அற்பமும் அற்றவராய் இருக்கிறார்
அவரிடத்தில் பிரபஞ்சமோ, வியவகாரமோ இருப்பதில்லை'

❀ ❀ ❀

துறவின் இரகசியமாவது. அகம்பாவத்தையும் ஆசைகளையும்அகற்றிவிடுவதேயாம்
அகங்காரத்தையும் மமகாரத்தையும் ஒளிப்பதே உண்மைத்துறவாகும்,
யோகமின்றித் (இல்லற தருமத்தைச் சரியாகச் செய்யாதவன்) துறவு அடைவது
துர்லபமாகும்,
துறவு அமிர்தத்துவத்தையும், அழிவற்றஆனந்தத்தையும் அருளுகின்றது

❀ ❀ ❀

சந்நியாசமின்றி, நீ மோகம் முழுமையும் அகற்றிவிட முடியாது
சந்நியாசம் உன்னை ஒரு முழுத்தீவிரமான முமுக்ஷுவாகச் செய்கிறது
சந்நியாசத்தின் மகிமை வாக்குக்கெட்டாததாய் இருக்கின்றது தாக!
சந்நியாசத்திற்கு மாட்சிமை உண்டாவதாக! சந்நியாசிகளுக்குக் கீர்த்தி உண்டாவ
சந்நியாசிகளின் மகிமை பாராட்டப்படுவதாக!

❀ ❀ ❀

துறவிஒருவரே பிரம்ம வித்தையைப் போதிக்க முடியும்
அவரே, குருவாவார்; அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் ஆதரவாவார்
அவரே, பிரம்மா; விஷ்ணு; சிவன்.
அவரே உலகமுழுமைக்கும் பற்றுக்கோடும், ஆறுதலளிப்பவரும், அடைக்கலமு
மாய் இருக்கின்றார்.

❀ ❀ ❀

சாதன சதுஷ்டயப் பயிற்சியே உன்னைத்துறவுக்குத் தயார் செய்யும்.
துறவி ஒருவரே உலகத்தில் மட்டற்ற மகிழ்ச்சியும்; அளவற்றசெல்வமும் உடைய
மனிதராவார்
உள்ளத்துறவு ஒன்றே உன்னைச் சக்கரவர்த்திகளுக்கெல்லாம் சக்கரவர்த்தியாகச்
செய்யும்.
ஆகையால்[ஆசைகளைத்] துறந்துதனிப்பொருளாகிய பிரம்மத்தின்கண் விசிராந்
தியையடைவீராக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## சற்குரு அணி மாலை.

கண்டேன் நான் வாம பாகம்
கங்கையின் கரையின்மீது
கொண்டேன் என் சிரத்தின் கண்ணே
குருபதம் நிச்சயத்தால்
விண்டேன் விண் போக மெல்லாம்
வீணென்ற கருத்தினாலே
பண்டே நம் பார்த்த னோர்க்கு
பாரொளி காட்டும்ஈசன்.

### திருத்தாண்டகம்.

அன்பினது ஆர்வத்தில் துறவு வைத்தார்
ஆறுகொண்ட நின்மலனை தேடிவைத்தார்
பண்பினது பெருமையினை பயில வைத்தார்
பலவகையில் மனம்புலனை பதக்கீழ்வைத்தார்
விண்ணவர்கள் நண்ணமாட்டா தவத்தை வைத்தார்
வீறுகொண்ட மனத்தகத்தில் கீதைவைத்தார்
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நாறுமலர் சிவானந்தர் நல்லவாறே.

பொதுமக்கள் பொன்வாழ்வை கருத்தில் வைத்தார்
பூதலத்தோர் யோகமதை பயில வைத்தார்
மதுமொழியும் தெய்வநெறி கழகம் வைத்தார்
மாதர்பலர் மதிவாழ்வை யுன்னவைத்தார்
கதுவுற்ற காமத்தின் தாழ்வு வைத்தார்
அதுவிலக்கும் வகைபலவும் விளங்கவைத்தார்
மதுவுற்ற திருவடியென் தலைமேல் வைத்தார்
மாண்பிலங்கும் சிவானந்தர் நல்லவாறே.

—சிவாக்கியன்.





பத்த மடைதனிற் பார்வதி தனக்கு
உத்தம மகனா யுதித்தனை போற்றி!
தாசில் தாராந் தவமுடை வெங்குவின்
மாசிலா மணியாய் வந்தனை போற்றி!
அப்பைய தீட்சிதர் ஆண்ட நல்மரபில்
குப்புச் சாமியாய்க் குலவினை போற்றி!
அன்னவர் ஆத்மாவே உன்னுட னுற்றதாய்
மன்னுல கேத்த மன்னினை போற்றி!
தந்தையைப் போலே தளரா முறையில்
சிந்தையில் சிவனுரு வைத்தனை போற்றி!
சின்ன வயசில் சிவநாம ஜெபத்தை
உன்னத நெறியா யுணர்ந்தனை போற்றி!
திருச்சியை யடைந்து திறமுடன் கற்றே
மருத்துவநூல் பயில் மருந்தே போற்றி!
மக்களுடற் பிணி மாற்றுந் தொழிலில்
மிக்கவுஞ் சித்தி யடைந்தனை போற்றி!
சிங்கப் பூரிலுஞ் செம்பி லானிலும்
எங்கும் கீர்த்தி எய்தினை போற்றி!
தண்ணளி கொண்டு தாய்போற் பேணி!
புண்யவான் பட்டம் பெற்றனை போற்றி!
விவேகா னந்தரின் வீர கர்ச்சனையால்
விவேக வைராக்கிய முற்றனை போற்றி!
பகவான் ரமணரின் பார்வை பெற்றபின்
சுகவாழ்வு துறந்த சுத்தனே போற்றி!
சிவநா மத்துடன் சேவையி லிறங்கி
நவமான சித்திகள் நண்ணினை போற்றி!
பவப்பிணி போக்க பத்திரிநாத் செல்லுந்
தவத்தின் குடற்பிணி தவிர்க்கும் நோக்கால்
சுவர்க்காஸ் ரமசேவை சுமந்தனை போற்றி!
அஷ்டாங்க யோகம் அனைத்தையும் பயின்று
இஷ்ட சித்திகள் எய்தினை போற்றி!
வேதம் ஆகமம் வேறுள கலையெலாம்
ஓதும் முறைகளில் ஒப்பிலாய் போற்றி!
எம்மதத் தினரும் ஏற்றிடும் முறையில்
எம்மதக் கொள்கை இயப்புவாய் போற்றி!
வசிஷ்டர் தொடக்கம் வள்ளலார் வரைக்கும்
விள்ளரும் ஞானிகள் விளம்பிய வெல்லாம்
தெள்ளித் தந்தருள் தேவே போற்றி!

பகவத் கீதையின் பாதை நான்கினையும்
சகமுழு தறியச் சாற்றுவாய் போற்றி!
சரியை கிரியை சாற்றிடும் யோகம்
உரிய நல்ஞான மெனும்படி நான்கையும்
சரிவர விளக்கும் சைவனே போற்றி!
ஆதி சங்கரர் ஆரிய மொழியில்
ஓதிய தெல்லாம் உலகு நன்கறிய
ஆங்கிலந் தன்னில் அருளுவாய் போற்றி!
ஆனந்தக் குடீரில் அடியரோ டுறைந்து
ஞானம் பொழியும் நாதனே போற்றி!
அன்புடன் வந்து அடைக்கலம் புகுவோர்
துன்பந் துடைக்குந் துரையே போற்றி!
தன்னை யடைபவர் தாளிணை தொடுமுன்
அன்னவ ரடிபணி அண்ணலே போற்றி!
இருளிடர் போக்கு மிரவி போலிருந்துங்
குருவெனுஞ் செருக்கிலாக் குணமே போற்றி!
தெய்வ நெறியாங் திருக் கழகத்தால்
உய்வழி உலகுக் குணர்த்துவாய் போற்றி!
நாயினேன் உடலம் நடுக்கா டுருது
தாய்போற் காத்த தற்பரா போற்றி!
அத்தனே போற்றி! அழகனே போற்றி!
முத்தனே போற்றி! முதல்வனே போற்றி!
பக்தனே போற்றி! பகவனே போற்றி!
வித்தனே போற்றி விமலனே போற்றி
சித்தனே போற்றி சிவானந்த போற்றி!
போற்றி! போற்றி! நின் பூங்கழல் போற்றி!
வாழ்க! வாழ்க! சிவானந்த ஜோதி!
வாழ்க! வாழ்க! யாத்திரைக் கோஷ்டி!
வாழ்க! அன்னார் அத்யாத்ம சேவை!
வாழ்க! என்றும் பாரத மாதா!
வாழ்க! வாழ்க! அவனி யெல்லாம்!



# குருவந்தனன்.

——:-:——

(சாது ஸ்ரீ முருகதாஸ்.)

உருகடந்த ஒன்றது உருவுகாட்ட வந்தது
குருபெயருங் கொண்டது கருவழி யடைத்தது
பெருவழி திறந்தது பேச்சுப்போய் மறைந்தது
திருபணிய வந்தது தீமையெல்லாம் நொந்தது.

## வேறு.

கோப மறியா உள்ளத்தான் குறைகள் காணாக் கண்ணினன்
தாபம் போக்கும் அன்பினால் தாங்கி யணைக்க வந்தனன்
பாபம் போக்கும் புனலினன் பயமகற்றும் வீறினன்
சாபம் சொல்லா வாக்கினன் ஜகமறிய வந்தனன்.

பொறுமை மலையிற் றவஞ்செய்து புனித எண்ண ஊனுண்டு
தருமம் தயையும் கூடவே தரணிவாழ வந்தனன்
பெருமை அன்பு செய்யலே பேணுமென்று சொல்லியே
அருமை வாக்கருளியே ஆசானாள வந்தனன்.

துட்ட உளமும் நோவாது தூய்மை புகுத்தும் மருத்துவன்
இட்டன் கர்வம் அடையாது இருக்க வாழ்த்தும் மருத்துவன்
கட்டச் சொல்லை நீக்கியே கருணை ஊசி ஏத்துவான்
அட்ட சித்தி அடிபணிய அருள்சிவா வந்தனன்.

அன்பி னுருவே வருகநீ அமைதி காட்ட வருகவே
இன்பநிலையே வருகநீ இன் னுயிரே வருகவே
என்புருகும் பக்தியும் எங்கும் சேவை தியாகமும்
துன்ப மின்றி வாழவே தூய குருநீ வருகவே.

சந்தை போன்ற மக்களுள் சாந்தி நிலவி வாழவே
எந்தை நீவருகவே ஈசா வருக வருகவே
நிந்தை பயம் நீக்கியே நீநானற்று அன்பினில்
சந்ததமும் வாழ்ந்திட சிவானந்தா வருகவே.

# சிவானந்தர் மணிமொழிகள்.

பகவான் அறியாமையையும், துக்கத்தையும், அச்சத்தையும் ஒழிப்பவர். நித்தியானந்தத்தை அளிப்பவர். அவரை அறிந்து கொள். எப்பொழுதும் அவர் உன்னிடத்தில் இருக்கிறார்.

என்றுங்குறையாத ஆன்மீயப் பொக்கிஷம் உன்னிடமேயுண்டு. மாயைத் திரையை நீக்கி மனமாசகற்றி, தெய்வசைதன்னியம் அடைவாய். தியானம் செய்து செய்து பரமாத்மாவுடன் கலந்து சாந்தி பெறுவாய். இதுவே எனது வாழ்வுப் பிரயாயாணத்தின் லட்சியம்.

உலகம் அநித்தியம், உனது வாழ்க்கை எத்தனைநாள்! உனது இளமைப்பருவம் பின்னர் வராது. இளமை, உற்சாகம், வைராக்கியம் நிறைந்துள்ள பருவத்திலேயே உனது லட்சியத்தில் உறுதியுடனிருக்கப் பழகு. சிரத்தையுடன் முயற்சிசெய், சித்திபெறுவாய்.

ஆத்மீக வாழ்வில் அளவற்ற தொல்லைகள் நேரிடும், அவற்றைக்கண்டு அதைரியப்படாதே. அது கூரியவாளின் முனையில் நடப்பதற்கொப்பானது. ஒவ்வொரு வீழ்ச்சியையும் உன்னை மகிழ்ச்சியுடன் உயரத்தூக்கிவிடும்படியாக மாற்றிக்கொள். ஞானிகள், ரிஷிகள், எல்லாரும் இவ்விதம் பல இடையூறுகளைத்தாண்டியே தங்கள் லட்சியத்தை அடைந்தனர்.

எப்பொழுதும் முகமலர்ந்திரு. உன்னைப்பிடுங்கித் தின்னும் கவலைகளைச் சிரித்தொழி. உள்ளத்தில் எழும் ஆசை, அகம்பாவம் முதலியவற்றைத் துடைத்து உனது மனதை உயர்த்து.

எச்சிறு கருமத்தைச் செய்தாலும் சரி, உனது உள்ளம் மனம், ஆத்மா அனைத்தும் அதில் ஒருமைப்பட்டு வேலைசெய்யும் முறையைப்பழகு, ஆத்மீகவாழ்வில் வெற்றிபெறுவதற்குகந்த யோகமார்க்கம் இதுவே.



வாதங்களில் தலையிட்டு வீணாகச் சக்தியை இழக்காதே. குரங்குபோல் அலையும் மனத்தை அடக்குவதற்கு மௌனத்தை விடச் சிறந்த சாதனையில்லை. ஆகையால் தினந்தோறும் இரண்டுமணித்தியாலமாவது மௌனமாயிருக்கப்பழகு.

எளியவாழ்வு உன்னை இறைவனுக்கருகில் சேர்க்கும். ஆகையால், உனது தேவைகளை நாளுக்குநாள் குறைத்துக்கொள். உதாரணமாக, நான்குசட்டைகள் வேண்டுமாயின், அதனை மூன்றாகக் குறைத்தல் எளியவாழ்க்கையின் விதி, தனக்காக வாழும் தன்னலவாழ்க்கை விடுதற்கு, இவ்விதமுறை அத்தியாவசியகமாகின்றது

நித்திரைக்குச் செல்லுமுன் அத்தினத்தில் செய்தபிழைகளை நினைந்து, ஆத்மவிசாரணை செய்து, பகவானிடம் மன்னிப்புக் கேட்கப்பழகு. வாழ்க்கையை இவ்விதம் சீர்திருத்திக் கொள்வதற்கு, தினக்குறிப்புப் புஸ்தகம் பெரும் உதவியாயிருக்கும்.

பாகவதத்தில் கூறியபடி, இக்கலியுகத்தில் இறைவன் நாமஜெபமே அவனை அடைவதற்கு மிகவும் லகுவானமார்க்கம். ஆகவே, 'ஓம் நமசிவாய', 'ஓம் சரவணபவாயநம', 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய', ஓம் நமோ நாராயணாய' 'ஸ்ரீராம்' எனும் மந்திரங்களுள் ஒன்றைத் தினந்தோறும் தவறாது ஜெபி.

நான் யார்? சம்ஸாரம் என்பது எது? எது பிரம்மம்? பந்தமெது? முக்தியெது? மாயை, அவித்யை என்றால் என்ன? என்று ஆராய்ச்சி செய்.

ஆத்மார்த்தத்தை தழுவு. பரிசுத்தத்தை பழகு. தர்மம்செய். கம்பீரத்தையும் பெருந்தன்மையையும் வளர்த்துக்கொள். தெய்வீகத்தை அடைந்துவிடு.

# உண்மைத் துணுக்குகள்.

(உமா.)

இன்பதுன்பங்களான இருநிலைகளிலும் சமநிலைகாண விரும்புவோன்வீண் ஆசைகளையும் என்னது என்னும் பாசங்களையும் பிறர் குற்றங்களைக்காணும் தம் பெரும் குற்றத்தையும் விடாமுயற்சியோடு உள்ளத்தை விட்டு ஒழித்து விடுவாராயின் கஷ்ட நஷ்ட சுக துக்கங்களால் ஒருபோதும் தாக்கப்படாத சமபுத்தியில் நிலைத்து அமைதியாக இடையூறின்றி தங்கள் லட்சியத்தை நோக்கி முன்னேறுவார்கள்.

துக்கத்தின் மூலத்தையும் துன்பத்தின் ரகசியத்தையும் தெரிந்துகொண்டு அமைதியை நாடும் ஒருவன் வீண் குதர்க்கவாதங்களில் ஒருபோதும் ஈடுபடான். அகந்தை தேய்ந்து மறையும் தறுவாயிலிருக்கும் தன்னுள்ளத்தமைதியின் தன்மையை சுயநலப் பிராந்தி சூழ்ந்த உலகம் ஒரு சிறிதளவேனும் உணரமுடியாதென்பதையறிந்து சமாதானத்தோடிருப்பான்.

பொறியின்பங்களின் ஆசையையடக்கி சுயநலமற்று உள்ளத்தில் தூய்மையும் வாய்மையும் அமைதியும் நிறைந்தோர் உலகிலிருப்பினும் உலகப்பற்றில்லாதிருப்பர். யானென்னும் அகந்தையற்றோர் அடைவது இன்பகரமான சாந்திநிலையே.

ஆத்மத்தியானமே இறைவனை அடைவதற்குவழி. அதனுடைய உதவி இன்றி இறைவன் தன்மையாம் கலப்பற்ற இன்பத்தைக் காணமுடியாது. இடைவிடாத இறைவனது நினைவால் நிரம்பிய உள்ளம் வெகுவிரைவில் இறைவனையணுகி அவனருளை அனுபவித்து அவன் மயமாகவே ஆகிறது.

ஆன்ம உலகில் பிரவேசித்துவிட்டவன், 'எப்படி வந்தேன், எப்படிப்போனேன், என்ன அறிந்தேன், எதை மறந்தேன்' என்பதும் அறியாத ஆழ்ந்த அமைதி யொன்றையே உடையவனாகி, 'அறிந்தேன், அறிய வில்லை' என்பதையும் அறியானாகி, இன்பவெளியில் உலாவுவான்,

[உமா 7-9-50ல் சிவபதம் அடைந்தார். அவரின் ஆன்மா சாந்திபெறுக.]



# செய்தித்திரட்டு.

## ஸ்ரீ சிவானந்தரின் 64-ம் ஆண்டு ஜெயந்தி விழா.

ஷ்டி விழா, கொழும்புக்கிளை தெய்வநெறிக்கழக ஆதரவில் 8-9-50 வெள்ளிக்கிழமை சைவமங்கையர்க்கழக மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணத்தில் திரு. டக்டர் சீ. நல்லைநாதன், திரு. கே. பி. கரன், ஸ்ரீமதி. பத்மாவதி கனகரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பக்திப்பாடல்களும் பாடப்பெற்றன.

செல்வச்சந்நிதி வாதனை மாண்டான் சின்னத்தம்பி சுவாமிகள் ஆச்சிரமத்தில் 8-9-50 வெள்ளிக்கிழமை முற்பகல் கொண்டாடப்பட்டது: கூட்டுப்பிரார்த்தனைக்குப்பின் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## கூட்டுப்பிரார்த்தனை.

யாழ்ப்பாணத்தில் கொட்டடியைச்சேர்ந்த வில்லூண்டிப் பிள்ளையார் கோயிலில் அன்பர் கே. குமாரகுலசிங்கம் அவர்களுடைய நன்முயற்சியால் வாரந்தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றுவருவது கேட்டு அகம்மிக மகிழ்கிறோம். யாழ்ப்பாணத்திற்கே ஒரு முன்மாதிரியாக நடைபெற்று வருகிறதென அதில் பங்குபற்றிய அன்பர் ஒருவர் தெரிவிக்கிறார். 8-9-50 அன்பர் எம் எஸ். திருவிளங்கம் அவர்கள் ஷ்டி கோயிலில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தி ஆலயவழிபாடு என்பதுபற்றிப் பேசினார்கள்.

தலவாக்கொல்லை இந்துசமுகத்தாரால் தலவாக்கொல்லை கதிரேசப்பெருமான் கோயிலில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை ஒழுங்காகநடைபெற்றுவருவது கேட்டு அகமிகமகிழ்கிறோம்.

## நல்லூர்த் திருவிழா.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் சுகாதாரப்பகுதியார் நல்ல தெய்வப்பணிசெய்தார்கள். திருவிழாவின்போது ஒவ்வொருநாளும் ஆத்மீகமான சொற்பொழிவுகளும் பக்திப்பாடல்களும் நடைபெற்றன. இம்முறையை யாழ்ப்பாணத்திலுள்ள மற்ற ஆலயங்களும் பின்பற்றுமாயின் சைவசமயம் மக்களின் வாழ்வுக்கு முன்மாதிரியான வழிகாட்டியாக அமைந்து தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறையாக விளங்குவானல்லவா?

# ஸ்ரீசிவானந்தர் அகில இந்திய யாத்திரை அட்டவணை.

| 1950ம் ஆண்டு செப்டம்பர் | புறப்படும் இடம். | சேரும் இடம், |
|---|---|---|
| 9 | ரிஷிகேஸம் | ஹரித்துவாரம் |
| 9 | ஹரித்துவாரம் | லக்ஷ்மணபுரி |
| 11 | லக்ஷ்மணபுரி | அயோத்தியா |
| 12 | அயோத்தியா | காசி |
| 15 | காசி | பாடலிபுரம் |
| 19 | பாடலிபுத்திரம் | காயா |
| 21 | காயா | கல்கத்தா |
| 24 | கல்கத்தா | வால்டையர் |
| 26 | வால்டையர் | இராஜமுந்திரி |
| 28 | இராஜமுந்திரி | பெஜவாடா |
| 29 | பெஜவாடா | சென்னை |
| அக்டோபர் | | |
| 2 | மகாத்மா காந்தி ஜெயந்தி சென்னை. | |
| 3 | சென்னை | விழுப்புரம் |
| 4 | விழுப்புரம் | சிதம்பரம் |
| 5 | சிதம்பரம் | மாயவரம் / தர்மபுர அதீனம் |
| 6 | மாயவரம் | தஞ்சாவூர் |
| 7 | தஞ்சாவூர் | திருச்சிராப்பள்ளி |
| 9 | திருச்சிராப்பள்ளி | செட்டிநாடு |
| 10 | செட்டிநாடு | இராமேஸ்வரம் |
| 10 | இராமேஸ்வரம் | தனுஸ்கோடி |
| 11 | தனுஸ்கோடி | தலைமன்னர் |

## 12-ந் திகதி காலை கொழும்பு சேர்தல்
## 13-ந் திகதி மாலை கொழும்பிலிருந்து தனுஸ்கோடி திரும்புதல்.



# சுவாமி ஸ்ரீ சிவானந்தர் அவர்களின் கொழும்பு அட்டவணை.

**12-10-50** வியாழக்கிழமை

காலை 8 மணி கொழும்பு கோட்டை ஸ்டேசனில் சுவாமி ஜீயை வரவேற்றல்.
மாலை 3-00 ,, நகரசபையின் வரவேற்பு
,, 4-15 ,, சர்வகலாசாலை—பிரசங்கம்.
,, 5-30 ,, தமிழ் யூனியன் கட்டிடத்தில் இந்துசமூகத்தினரின் வரவேற்புபசாரணை.
,, 7-30 ,, ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம், வெள்ளவத்தை பஜனை, உபந்நியாசம் முதலியன.

**13-10-50** வெள்ளிக்கிழமை

காலை 7.30 மணி தம்பையாசத்திரம் பிரார்த்தனைக்கூட்டம்
மாலை 4-30 ,, விவேகானந்தசபை, பஜனை, உபந்நியாசம்.
,, 7-00 ,, கோட்டை ஸ்டேசனில் சுவாமிஜீக்கும் யாத்திரைக்கோஷ்டிக்கும் பிரியாவிடை

☞ இதில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படின் விளம்பரங்கள்மூலம் அறிவிக்கப்படும்.

## சிவானந்தா யாத்திரா மண்டலி.

காரியநிர்வாகசபை (இலங்கை)

சேர் கந்தையா வைத்தியநாதன் (தலைவர்)
திரு. கே. ஆழ்வாப்பிள்ளை (உதவித் தலைவர்)
திரு. கே. இராமச்சந்திரா (கௌரவ காரியதரிசி)
திரு. எஸ். கே. ஐயர் (கௌரவ தனாதிகாரி)
ஸ்ரீமதி. சிவானந்தம் தம்பையா ஸ்ரீமதி. எஸ். தியாகராசா
திரு. எ. பி. குமரப்பன் செட்டியார்
திரு எஸ். சி. பாங்கர் டக்டர். ஏ. கனகரத்தினம்
,, சி. பரஸ்ராம் திரு. எஸ். செல்லமுத்து
,, கெ வி. எஸ். சுந்தரம் ,, எம் எஸ். திருவிளங்கம்

# சிலோன் சோல் ஏஜெண்டு

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| பாரதசக்தி மகாகாவியம் | 15 0 | கவாஸட ஞாஞ்ஜலி | 2 0 |
| யோகசித்தி | | சிவானந்தஜோதி | 1 8 |
| மூலமும்உரையும் | 3 0 | தேசியகீதம | 1 8 |
| அருட்செல்வம் | 2 0 | புதுயுகப்பாட்டு | 1 8 |
| இல்லறவொழுக்கம் | 0 4 | பாப்பாபாட்டு | 0 8 |
| அர்ச்சனை மாலை | 0 6 | இதுதான் உலகம் | 8 0 |
| திருக்குறள் இன்பம் | 3 8 | கலைக்கோயில் | 7 8 |
| கவிக்கனவுகள் | 1 8 | ஏழைபடும்பாடு | 5 0 |
| பகவத்கீதை | 1 4 | நாவலர்பெருமான் | 3 0 |
| கீர்த்தனாஞ்ஜலி | 3 8 | ஸ்ரீ அரவிந்தப்பிரகாசம் | 2 8 |
| சாதனகீதம் | 2 0 | பெரியவாள் கதை | 1 8 |
| ஹரிகீர்த்தனம் | 1 4 | கஸ்தூரி | 0 8 |

இன்னும் அநேக புத்தகங்கள் உண்டு.

☞ மொத்தமாகவும், சில்லறைக்கும், நேரிலும், வி. பி. பி மூலமும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கமிஷன் உண்டு.

விபரங்களுக்கு எழுதுக:

**M. O. Murugesapillai & Sons.,**

**"SARAVANA PRESS"**

**NAWALAPITIYA (CEYLON)**

## தாய் தந்த செல்வம்

முதலியக டுரைகள் முதற்தொகுப்பு. ரூபா ஒன்று

திருப்புகழ்மணி: ஸ்ரீ T. M. கிருஷ்ணசாமிஐயர்

குங்குமம் காரியாலயம்.

மதராஸ் 10.


# SIVANANDA

### THE SAINT OF THE AGE.

---

On this most auspicious day
There is something I can say
Having learnt from you to pray.

Thank you Lord for everything,
To Thy lotus feet I bring
Song of love and greetings sing.

Though apart by many a mile
Finding you has been worthwhile,
With your wise Vedantic smile.

At the age of Sixty-four
Making known the ancient lore,
Sending word from shore to shore.

You tell men it's not too late
Strive, exert, don't trust to fate,
Serve, renounce and meditate.

Seers are born from age to age,
Hard to get is birth of sage,
And your wisdom hard to gauge.

Though engrossed in meditations
You have given birth to nations,
Let mankind give exclamations.

Greetings to His Holiness from a European devotee
( 31 G. Robinson London, W. C. 2) on the
occasion of His 64th Brithday
Jayanthi on 8-9-50

Registered at the G P. O as News Paper


## Some of the important books of and about

## SRI SWAMI SIVANANDA

| | | | |
|---|---|---|---|
| 1 Women's Light and Guide | 10 | 0 | 0 |
| 2 Diamond Jubiles Volume | 12 | 0 | 0 |
| 3 Srimad Bhagavad Gita [commentary] | 8 | 0 | 0 |
| 4 Brahma Sutras Vol I & II | 12 | 0 | 0 |
| 5 Concentration and Meditation | 5 | 0 | 0 |
| 6 All about Hindusim | 4 | 0 | 0 |
| 7 Lives or saints Vol. II | 4 | 8 | 0 |
| 8 Gospal or Swami Sivananda | 4 | 8 | 0 |
| 9 Siva Gyan's Life or Sivananda | 5 | 0 | 0 |
| 10 Lord Siva and His Worship | 4 | 0 | 0 |
| 11 Yogic Home Exercises | 3 | 12 | 0 |
| 12 Ethical Teachings | 3 | 8 | 0 |
| 13 Hindu Fasts and Festivals | 3 | 4 | 0 |
| 14 Wisdom Sparks | 3 | 0 | 0 |
| 15 Illuminating Stories | 3 | 0 | 0 |
| 16 Philosophy & Yoga in Poems | 3 | 0 | 0 |
| 17 Light Fountain | 3 | 0 | 0 |
| 18 Spiritual Lesson | 3 | 0 | 0 |
| 19 Upanishad Drama | 3 | 0 | 0 |
| 20 Siva, the prophet of the New Age | 3 | 0 | 0 |
| 21 Mind, Its Mysteries & control Parts I & II | 5 | 0 | 0 |
| 22 Principal Upanishads Part II | 3 | 0 | 0 |
| 23 Conversations on Yoga | 2 | 8 | 0 |
| 24 World's Religions | 2 | 8 | 0 |
| 25 Philosophy & Meditation on OM | 2 | 4 | 0 |
| 26 Sangeeta Lila Yoga | 2 | 0 | 0 |
| 27 Light, Power, Wisdom | 2 | 0 | 0 |
| 28 Samadhi Yoga [Tamil] | 5 | 0 | 0 |

## The Sivananda Publication League,

**P. O. ANANDA KUTIR,**

**RIKHIKESH (HIMALAYAS)**



கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா, முத்தையா

'ஆத்மஜோதி' நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)

பதிப்பு: சரவணப்பிறஸ் நாவலப்பிட்டி 17-3-50